# கோட்டாறு மறைமாவட்டம்

# இறைமக்கள் பேரவை 2024

## இறைவேண்டல்

## இணைந்து பயணிக்கும் கோட்டாறு திருஅவையாக

○ ஒன்றிப்பு ○ பங்கேற்பு ○ நற்செய்தி அறிவிப்பு

இணைந்து பயணிப்போம்

இறையாட்சிப் பணித்தொடர்வோம்

இறைவா!
இணைந்து பயணிக்கும்
கோட்டாறு திருஅவையாக
எம்மை வாழ அழைப்பவரே!

எம் அருள்வாழ்வைப் புதுப்பிக்க
ஒன்றிணையும் நாங்கள்
இறையாட்சியின் கனவு மெய்ப்பட
சமூக அடக்குமுறைச் சிந்தனைகள் வேரறுத்து
பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் களைந்து
பாலின வேறுபாடு அகற்றி
திருநிலை பொதுநிலை இடைவெளி தகர்த்து
சமத்துவ அறநெறியில் எம்மை வழிநடத்தியருளும்.

காலத்தின் அறிகுறிகளைக் கண்டுணர்ந்து
விளிம்புநிலை மாந்தரின்
எளிய குரலுக்கும் செவிமெடுத்து
பங்கேற்பாலும் பங்களிப்பாலும்
மனித வளங்களை ஒருமுகப்படுத்தி
இறைவார்த்தையின் ஒளியில்
நலமானவற்றைத் தேர்ந்துத் தெளிந்து
மாற்றம் தேடும் திருஅவையாக மிளிரச் செய்யும்.

வார்த்தைக்கு வலுசேர்க்கும் செயல்திட்டங்களால்
நீடித்த வளர்ச்சியை
இலக்காகக் கொண்டு இயங்கிட
எம் இதயங்களைப் பற்றியெரியச் செய்தருளும்.
இயங்க வைக்கும்
தூய ஆவியாரின் உயிராற்றலால்
நாங்கள் அனைவரும் உம் பிள்ளைகள் எனும்
ஒன்றுபட்ட உணர்வோடு
அன்னை மரியாவின் உடனிருப்பால்
இறையாட்சியின் இலட்சிய முதன்மைகளைக்
கண்முன் கொண்டு
இயக்கமாகும் திருஅவையாய்
இணைந்து பயணிக்க அருள்தாரும். ஆமென்.

Assisi Press, Ngl.